©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17] சென்னை, புதன்கிழமை, மே 11, 2011
சித்திரை 28, திருவள்ளுவர் ஆண்டு—2042

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (2டி) எண் 23, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, நாள் : 18 மே 2010.]*

தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் 54 ஆம் விதியைச் சேர்ந்த (1) துணைவிதியின் (iii) மற்றும் (iv) ஆம் பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் நபர்களை மலைத்தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதி ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர்களாக இதனால் நியமனம் செய்கிறார்.

| | | |
|---|---|---|
| அரசு முதன்மைச் செயலாளர்,<br>தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறை,<br>சென்னை—600 009. | : | தலைவர் |
| மலைத்தோட்ட தலைமை ஆய்வாளர்,<br>தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகம்,<br>சென்னை—600 006. | : | செயலாளர் |

I. **அலுவல் உறுப்பினர்**

1. தொழிலாளர் நல ஆணையாளர்,
   சென்னை—600 006.

2. தலைமை பொறியாளர் (கட்டடங்கள்),
   பொதுப் பணித் துறை,
   சென்னை—600 005.

3. அரசு இணைச் செயலாளர்,
சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை,
சென்னை—600 009.

4. அரசு துணைச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை,
சென்னை—600 009.

II. **வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள்**

1. நிருவாக இயக்குநர்,
அரசு ரப்பர் கழகம்,
வடசேரி, நாகர்கோவில்—629 001.

2. நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம்,
குன்னூர்—643 101.

3. தலைவர்,
நீலகிரி வயநாடு மலைத்தோட்டத்
தொழிலாளர்கள் சங்கம்,
அஞ்சல் பெட்டி எண். 53,
யு.ப்பி.ஏ.எஸ்.ஐ. கட்டடம், கூடலூர்,
நீலகிரி—643 212.

4. தலைவர்,
தமிழ்நாடு மலைத்தோட்டத்
தொழிலாளர் சங்கம்,
42, ஏ.ட்டி.டி.ட்டி காலனி,
கோயம்புத்தூர்—641 018.

III. **தொழிலாளரின் பிரதிநிதிகள்**

1. திரு. ஜி. சுரேஷ்,
தமிழ்நாடு மாநிலக்குழு உறுப்பினர்,
சி.ஐ.ட்டி.யூ,
12/30சி, பந்தலூர் அஞ்சல்,
நீலகிரி—643 233.

2. திரு. எஸ். பாலன்,
பொதுச் செயலாளர்,
நீலகிரி மாவட்ட எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன்,
ஐ.என்.ட்டி.யூ.சி,
கூடலூர்—643 212.

3. திரு. வி.பி. வினோத்குமார்,
இணை பொதுச் செயலாளர்,
ஆனைமலை திராவிட தொழிலாளர் முன்னேற்ற சங்கம்,
எல். ப்பி. எஃப்,
8/447, கூட்டுறவுக் காலனி,
வால்பாறை,—642 127, கோயம்புத்தூர் மாவட்டம்.

4. திரு. எஸ். சுப்பையா, ஏ.ஐ.ட்டி.யூ.சி.,
3/229, சுன்னம்பில் கோட்டம்,
மாஞ்சோலை எஸ்டேட்,
அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

**ட்டி. பிரபாகர ராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**முனைவர் ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 288, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி (ந.மே.4—2)த் துறை, நாள்: 15 டிசம்பர் 2010.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 17—04—1974 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II—பிரிவு 2 இல் 219 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 15 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் சிவகாசி உள்ளூர் திட்டப் பகுதியில் கூடுதல் பகுதிகளை சேர்த்து, கீழ்க்காணும் திருத்தங்களை செய்வதற்கான கருத்தை இதனால் அறிவிக்கிறார்.

2. இந்த வரைவு திருத்தம், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைதற்கு முன்னர், இது தொடர்பாக அங்கு வசிப்பவரிடமிருந்தோ அல்லது யாதொரு உள்ளூர் அதிகார மன்றத்திடமிருந்தோ அல்லது உள்ளூர் பகுதியிலுள்ள நிறுவனத்திடமிருந்தோ மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால், தமிழ்நாடு அரசு அதனை உரியவாறு பரிசீலிக்கும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்துமூலமாக தமிழ்நாடு அரசுச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

### வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள ‘‘அட்டவணை’’ க்குப் பதிலாக, கீழ்க்காணும் ‘‘அட்டவணையை’’ அமைத்துக்கொள்ள வேண்டும்; அதாவது,

### அட்டவணை

| *வரிசை எண்* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்* | *உள்ளூர்த் திட்டப் பகுதியாக அமையும் பகுதி* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| (1) | சிவகாசி நகராட்சிப் பகுதி (சிவகாசி கிராமத்தில் ஒரு பகுதி மற்றும் விஸ்வநத்தம் கிராமத்தில் ஒரு பகுதி). | |
| (2) | திருத்தங்கல்—நகராட்சிப் பகுதி (திருத்தங்கல் மற்றும் கீழ்திருத்தங்கல் கிராமத்தில் ஒரு பகுதி) | |
| (3) | சிவகாசி கிராமத்தில் ஒரு பகுதி (சித்துராஜபுரம்) | |
| (4) | விஸ்வநத்தம் கிராமத்தில் ஒரு பகுதி | |
| (5) | திருத்தங்கல் கிராமத்தில் ஒரு பகுதி | |
| (6) | கீழ்திருத்தங்கல் கிராமத்தில் ஒரு பகுதி | |
| (7) | அனையூர் கிராமம் | |
| (8) | நாராயணபுரம் கிராமம். | |

**அசோக் டோங்ரே,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**முனைவர் ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை.

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 23, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி (UD 4–2)த் துறை, நாள்: 27 ஜனவரி 2011.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆத்தூர் உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியில், கூடுதல் பகுதியினை சேர்ப்பதற்கும், 10–04–1974 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II—பிரிவு 2 இன் 205 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் II(2)/RUL/1999/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்வதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகாரி அல்லது நிறுவனத்திடமிருந்து **தமிழ்நாடு அரசிதழில்** இந்த அறிவிக்கையின் வெளியீட்டு நாள் முடிவடைவதற்கு முன்னர் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால், தமிழ்நாடு அரசு அதனை உரியவாறு கருதிப்பார்க்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்துமூலமாக அரசுச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், ‘‘அட்டவணை’’ என்பதற்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; அதாவது:—

### "அட்டவணை

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்* | | | | *உள்ளூர் திட்டப் பகுதியாக அமைகின்றப் பகுதி* |
|---|---|---|---|---|---|
| *(1)* | | | *(2)* | | *(3)* |
| 1 | ஆத்தூர் | (1) | 70 | ஆத்தூர் நகராட்சி | |
| | | (2) | 52 | நரசிங்கபுரம் | நரசிங்கபுரம் நகராட்சி |
| | | | 41/1 | உடையாம்பட்டி | |
| | | | 41/2<br>55 | லஷ்மணமுத்திரம் | |
| | | (3) | 42 | தாண்டவராயபுரம் | |
| | | (4) | 53 | தென்னங்குடி பாளையம் | |
| | | (5) | 54 | அப்பமேசமுத்திரம் | |
| | | (6) | 67 | முட்டல் | |
| | | (7) | 69 | கல்லாநத்தம் | |
| | | (8) | 68 | அம்மம்பாளையம் | |
| | | (9) | | துலுக்கனூர் | |
| | | (10) | 72 | வளையமாதேவி.’’ | |

**அசோக் டோங்ரே,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**முனைவர் ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.